செய்தி வெளியீடு எண்:665 நாள்: 08.10.2017

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (8.10.2017) பள்ளிப்பாளைம்—ஈரோடு இடையே புதிதாக கட்டப்பட்டுள்ள உயர் மட்ட பாலத்தை திறந்து வைத்து விழாப் பேருரை ஆற்றினார்கள்**

கோடானுகோடி தமிழ் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற புரட்சித்தலைவி அம்மாவை வணங்கி, பள்ளிப்பாளையம்—ஈரோடு காவிரி ஆற்றின் குறுக்கே புதிதாக கட்டப்பட்டுள்ள எள்ள மட்ட பாலம் திறப்பு விழா நிகழ்ச்சியிலே தலைமை தாங்கி ஒரு சிறப்பான தலைமையுரையாற்றி அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே, மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சர் திருமதி வி.சரோஜா அவர்களே,மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.கே.சி.கருப்பணன் அவர்களே,நாடாளுமன்ற உறுப்பினர் திரு.எஸ்.செல்வகுமார சின்னையன் அவர்களே,நாடாளுமன்ற உறுப்பினர் திரு.பி.ஆர்.சுந்தரம் அவர்களே,சட்டப்பேரவை உறுப்பினர்கள் திரு.கே.வி.ராமலிங்கம் அவர்களே, திரு கே.எஸ். தென்னரசு அவர்களே, திரு. கே.பி.பி.பாஸ்கர் அவர்களே, திரு.சி.சந்திரசேகரன் அவர்களே, திருமதி பொன்சரஸ்வதி அவர்களே, திரு.சிவசுப்பிரமணியம் அவர்களே, திரு.ராஜாகிருஷ்ணன் அவர்களே, திரு.ஈஸ்வரன் அவர்களே, திரு.எஸ்.ராஜா அவர்களே, திரு.வெற்றிவேல் அவர்களே, மற்றும் வரவேற்புரையாற்றிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களே,முன்னாள் அமைச்சர்களே, முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, முன்னாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளே, வருகை தந்திருக்கின்ற கழக பொறுப்பாளர்களே மற்றும் அரசு உயரதிகாரிகளே, முக்கிய பிரமுகர்களே, பெரியோர்களே, தாய்மார்களே, பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் பணிவான வணக்கம்.

இந்தப் பாலத்தை பொறுத்தவரைக்கும், மிக கடினப்பட்டு இந்தப் பாலம் கட்டப்பட்டது. ஏனென்றால், அந்தப்பாலம் கட்டவேண்டுமென்று பலமுறை கோரிக்கை வைத்தார்கள். புரட்சித் தலைவி அம்மாவிடத்திலே நான் மாண்புமிகு அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள் சொன்ன கருத்தை சொன்னபொழுது, அம்மா அவர்கள் கட்டியே ஆகவேண்டுமா என்று கேட்டார்கள்.

நிச்சயம் கட்டி ஆக வேண்டும். ஏனென்று சொன்னால், நாம் பலமுறை இந்த பாலத்தின் செல்கின்றபொழுது, விழாக் காலங்களிலும், திருமண காலங்களிலும் கிட்டத்தட்ட 1 மணி நேரம் இங்கே போக்குவரத்து நெரிசல் ஏற்பட்ட பிறகு தான் பாலத்தை கடக்கவேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. அதுமட்டுமல்ல, இரண்டு பகுதிகளிலுமே தொழிற்சாலைகள் நிறைந்த பகுதி. காவிரி ஆற்றின் குறுக்கே இந்தப் பாலத்தின் வழியாக செல்கின்ற பொழுது, தினந்தோறும் தொழில் ரீதியாக செல்கிறார்கள். இன்றைக்கு அதிகம் பேர் இருசக்கர வாகனத்தில செல்வதால் அதிக விபத்துக்கள் நேரிடுகிறது. இந்தப் பகுதி போக்குவரத்து நெரிசல் உள்ள பகுதியாக இருப்பதால், இந்தப்பாலம் மிகமிக அவசியம் என்று கூறியவுடனே அம்மா அவர்களால் பாலம் அறிவிக்கப்பட்டு, பலமுறை டெண்டர் கோரினோம். இது கடினமான பாறை நிறைந்த பகுதியாக இருப்பதால், யாரும் முன்வரவில்லை. இங்கு தண்ணீர் தேங்குவதால், இங்கு ஒரு குறிப்பிட்ட மாதங்களில் பணிகள் செய்ய இயலும், மற்ற காலங்களில் செய்ய இயலாது. மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சருக்கு துணையாக இருந்து அப்போதைய பொதுப்பணித் துறை அமைச்சர் திரு கே.வி.ராமலிங்கம் அவர்களும் இதற்கு கடுமையான முயற்சி எடுத்து, நானும், கவரப்பள்ளி சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், ஈரோடு சட்டமன்ற உறுப்பினராக இருந்து திரு கே.வி.ராமலிங்கம் அவர்களும், நாங்கள் மூன்று பேரும் சேர்ந்து சேர்ந்து கடுமையாக போராடிதான் இந்த பாலத்தையே கொண்டு வந்தோம். அப்பொழுது, நெடுஞ்சாலைத்துறை அமைச்சராக இருந்ததால், இந்தப் பாலம் கட்டி முடிந்து, இன்றைக்கு மக்களுடைய பயன்பாட்டிற்கு திறக்கப்பட்டிருக்கிறது. அவ்வளவு கடினப்பட்டு கட்டிய பாலம் இந்தப் பாலம் என்பதை கோடிட்டு காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு தமிழ்நாட்டிலே, போக்குவரத்து வசதி நிறைந்த ஒரே மாவட்டம் நாமக்கல் மாவட்டம் தான். அதற்குக் காரணம், உங்களுடைய அமைச்சர் திரு.தங்கமணி அவர்கள்தான். ஒவ்வொரு என்னை சந்திக்கின்ற பொழுதெல்லாம், எங்களுடைய மாவட்டம் தொழில் நிறைந்த மாவட்டம், தொழிற்சாலை நிறைந்த மாவட்டம், கல்லூரி, பள்ளிகள் நிறைந்த மாவட்டம். ஆகவே, போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ள மாவட்டமாகஉள்ளதால், எல்லா சாலைகளையும் விரிவுபடுத்திக் கொடுக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார். ஆகவே, சங்ககிரியிலிருந்து

பள்ளிப்பாளையத்திற்கு நான்கு வழிச்சாலைகள் அம்மாவோடு ஆசியோடு இன்றைக்கு அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதேபோல, ஈரோட்டிலிருந்து திருச்செங்கோட்டிற்கும் சாலை அகலப்படுத்தப்படும் என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். திருச்செங்கோட்டுக்கும் சாலை அகலப்படுத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, அவர் கோரிக்கை வைத்தார், இங்கே எஸ்.பி.பி.மில்லுக்கு போவதற்கு கீழ்ப்பாலம் கீழ்ப்பாலம் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். அதையும் அம்மா sanction செய்தார்கள். அம்மா இல்லாவிட்டாலும், அம்மாவினுடைய அரசு அதைத் தொடர்ந்து நிறைவேற்றும். எஸ்பிபி காலனியில் ஒரு பாலம் வேண்டுமென்றார்கள். அதையும் அம்மா அவர்கள் உடனே நிறைவேற்றி இன்னும் நான்கு மாதங்களில் பாலம் திறக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது, அதுவும் திறப்பு விழா செய்யப்படும். மாண்புமிகு அமைச்சர் திரு தங்கமணி அவர்கள் திருச்செங்கோட்டிலிருந்து எல்லா பகுதிகளுக்கும் சாலையை விரிவுபடுத்த வேண்டும் என்று சொன்னார்கள். அங்கிருந்து பரமத்திவேலூர், அந்தப்பணி முடிவுற்றுள்ளது. திருச்செங்கோட்டிலிருந்து நாமக்கல்லுக்கு நான்கு வழிச்சாலை, திருச்செங்கோட்டிலிருந்து மல்லிக்கரைக்கு, ராசிபுரத்திலிருந்து மல்லிக்கரை வரைக்கும் சாலை அகலப்படுத்தும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. திருச்செங்கோட்டிலிருந்து ஓமலூர் வரை சங்ககிரி வழியாக நான்கு வழிச்சாலை அமைப்பதற்கும் sanction ஆகிவிட்டது. நாமக்கல்லிருந்து திருச்சி வரை செல்வதற்கு தேசிய நெடுஞ்சாலை மூலமாக சாலை நான்கு வழிச்சாலையாக உருவாக்குவதற்கும் அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஆக, ஒரு மாவட்டத்தில் பிரதான சாலைகள் அனைத்துமே அகலப்படுத்தப்பட்ட மாவட்டம் இந்த நாமக்கல் மாவட்டம் தான். அதற்குக் காரணம், உங்களுடைய மாவட்ட அமைச்சர் திரு தங்கமணி அவர்களும், மாண்புமிகு அமைச்சர் டாக்டர் சரோஜா அவர்களும் என்னிடத்திலே வைத்த கோரிக்கை, அந்த கோரிக்கையை அம்மாவினுடைய அம்மாவினுடைய அரசு நிறைவேற்றித் தந்திருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைக்கல்லூரி வேண்டுமென்று கேட்டார்கள், அதுவும் அம்மாவினுடைய ஆட்சியிலே கொடுக்கப்பட்டிருக்கின்றது. காவல் நிலையம் வேண்டுமென்று கேட்டார்கள், அதுவும் அம்மாவினுடைய sanction செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றது. தீயணைப்பு நிலையம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இங்கே தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியாக இருப்பதால், தீ ஏற்பட்டால் உடனுக்குடன் அணைக்க வேண்டுமென்ற அடிப்படையில் தீயணைப்பு நிலையம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சுற்றுலா மாளிகை கேட்டார்கள், அதுவும் கட்டிக் கொடுக்கப்பட்டது. கேட்டதெல்லாம் நிறைவேற்றப்பட்ட ஒரே தொகுதி குமாரபாளையம் தொகுதி தான் என தெரிவித்துக் கொள்கிறேன்.

350 கோடி ரூபாயில் கூட்டுக்குடிநீர்த் திட்டம் தீட்டப்பட்டிருக்கின்றது. இந்தத் திட்டத்தின் வாயிலாக குமாரபாளையம் சட்டமன்றத் தொகுதி, திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதி, சங்ககிரி பேரூராட்சி, இதெல்லாம் ஒன்றாக இணைந்து 350 கோடி ரூபாயில் காவிரி ஆற்றிலிருந்து தண்ணீர் எடுக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு நிலையான காவிரி தண்ணீரை இந்த அம்மாவினுடைய அரசு விரைவாக மக்களுக்கு வழங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு எதிர்க்கட்சிகள் வேண்டுமென்றே திட்டமிட்டு தவறான பிரச்சாரத்தை சொல்லிக்கொண்டே இருக்கின்றார்கள். ஒரு பொய்யை திருப்பித்திருப்பிச் சொன்னால், மக்கள் நம்பிவிடுவார்கள் என்று எண்ணுகிறார்கள், அது நிச்சயமாக நடக்காது. ஏனென்றால், நாங்களே திட்டத்தை அறிவித்து, நாங்களே திறந்து வைக்கின்ற காட்சியை அண்ணா திமுக–வில் தான் பார்க்க முடியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்கமணி அவர்களும், சமூக நலத்துறை அமைச்சர் திருமதி சரோஜா அவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர் கி.ஆர்.சுந்தரம் அவர்களும், மற்றும் திரு செல்வகுமார சின்னையன் அவர்களும், சட்டப்பேரவை உறுப்பினர்களெல்லாம் இங்கே வந்து அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து நாங்களே திறந்திருக்கின்றோம். ஆகவே, இதுவே சாட்சி. எனவே, ஒவ்வொரு திட்டமும் அம்மாவிடைய ஆட்சியிலே உருவாக்கப்பட்ட திட்டம்தான். 2011ல் அம்மா ஆட்சி பொறுப்பேற்ற பின்பு 2017 வரைக்கும் எவ்வளவு திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம், நாங்கள் சொன்ன திட்டங்களெல்லாம் இன்றைக்கு

நிறைவேற்றப்பட்டிருக்கிறது. 2011க்கு முன்பு பாருங்கள், என்ன அவர்கள் செய்தார்கள்? சட்டமன்றத் தொகுதி இப்பொழுது திருச்செங்கோட்டிலிருந்து குமாரபாளையம் தொகுதி பிரிந்திருக்கின்றது. குமாரபாளையம் சட்டமன்றத் தொகுதிக்கோ அல்லது திருச்செங்கோட்டு தொகுதிக்கோ, அல்லது நாமக்கல் மாவட்டத்தில் இருக்கின்ற எந்த தொகுதிக்காவது என்ன திட்டங்களைக் கொடுத்தார்கள்? ஒன்றையும் கொண்டு வரவில்லை. ஆனால், வேண்டுமென்றே திட்டமிட்டு எல்லா ஊடகங்களிலும், எல்லா மேடைகளிலுமே இந்த ஆட்சி, செயலிழந்த ஆட்சி என்று குறிப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் சொல்வதெல்லாம் அம்மாவினுடைய அரசு, செயல்படும் அரசு என்பதை நாங்கள் இப்பொழுது நிரூபித்துக் காட்டிக் கொண்டிருக்கின்றோம். எல்லா திட்டங்களுக்கும் நாங்களே நேரடியாக சென்று அடிக்கல் நாட்டுகின்றோம், அந்தப் பணி முடிந்தபிறகு, நாங்களே திறந்து வைக்கின்றோம். அப்படிப்பட்ட ஆட்சி அம்மாவினுடைய ஆட்சி. ஆகவே, மக்களுக்கு என்ன தேவையோ, அதை நிறைவேற்றுகின்ற ஆட்சியாக இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. வேண்டுமென்றே திட்டமிட்டு, இந்த ஆட்சி மீது ஏதாவது ஒரு களங்கம் கற்பிக்க வேண்டும், எதையாவது ஒன்றை கண்டுபிடித்து, ஒரு போராட்டத்தை உருவாக்கி, அதன்மூலம் இந்த ஆட்சிக்கு கெட்ட பெயரை உருவாக்க வேண்டும் என்று திட்டம் தீட்டி இன்றைக்கு செயலாக்கிக் கொண்டிருக்கின்றார்கள் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள். ஆனால், புரட்சித்தலைவி அம்மா விட்டுச் சென்ற பணியை நாம் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். அதுமட்டுமல்லாமல், மக்களுக்கு என்ன தேவை, என்ன திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று பார்த்துப் பார்த்து, திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்ற ஆட்சி அம்மாவினுடைய ஆட்சி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் ஒருபடி மேலே போய், சொல்கிறார், இந்த ஆட்சி கலைக்கப்பட வேண்டிய ஆட்சி, இந்த ஆட்சியில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து போய்விட்டது என்று, எங்கே சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து போனது சொல்லுங்கள் பார்க்கலாம். இன்றைக்கு இந்தியாவிலேயே அமைதிப் பூங்காவாக விளங்கக் கூடிய ஒரே மாநிலம் தமிழ்நாடு தான். ஆனால், மற்ற மாநிலத்தை ஒப்பிட்டுப் பாருங்கள். இவர்கள் சட்டமன்றத்திலே பேசினார்கள், பல

புள்ளிவிவரங்களையெல்லாம் கொடுத்தார்கள். நாஙகள், காவல்துறை மானியக் கோரிக்கையின் போது அதற்குத் தகுந்த பதில்களை நாங்கள் கொடுத்தோம். தமிழகத்திலே புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சிசெய்த பொழுதும் சரி, அம்மா மறைவிற்குப் பிறகு அம்மாவினுடைய திட்டங்களை நாங்கள் சிறப்பாக செயல்படுத்திக் கொண்டிருக்கின்றோம், அம்மா அவர்கள் விட்டுச்சென்ற பணியை நாங்கள் தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கின்றோம். சட்டம்,ஒழுங்கு சிறப்பாக பேணிக்காக்கப்படுகின்ற ஆட்சி, அம்மாவினுடைய ஆட்சி. இன்றைக்கு வேறு எந்த மாநிலத்திலும் இந்த அளவிற்கு சட்டம், ஒழுங்கு கிடையாது. இவர்களுக்கு எதுவுமே கண்டுபிடிக்க முடியவில்லை, பூதக்கண்ணாடி வைத்து தேடித்தேடி பார்க்கிறார்கள், ஏதாவது குறையை கண்டுபிடித்து பேசலாம் என்றால். எந்தக்குறையும் காணமுடியாத அரசு அம்மாவினுடைய அரசு என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் திரு தங்கமணி அவர்கள் சொல்லும்பொழுது, 140 ஆண்டுகாலம் இல்லாத வறட்சியை நாம் சந்தித்தோம். அப்பொழுதாவது விலைவாசி உயர்ந்ததா ? குடிப்பதற்கு 1000 அடி bore போட்டால் தான் தண்ணீர் கிடைக்கும். அப்படி bore போட்டாலும், 10 நாட்கள் 15 நாட்களுக்கு தான் தண்ணீர் கிடைக்கும், அதற்கப்புரம் அது வறண்டு போய்விடும். உடனடியாக அதற்கு அருகில் இன்னொரு bore போட்டு அந்த மக்களுக்கு தண்ணீர் கொடுத்தோம். பல்லாயிரக்கணக்கான கோடியை அள்ளிக் கொடுத்து, எங்கேயும் குடிநீர் பிரச்சினை இல்லாமல் அம்மாவினுடைய அரசு பார்த்துக் கொண்டுள்ளது. இன்றைக்கு, எல்லாம் வல்ல இறைவனுடைய அருளால், வருண பகவானுடைய அருளால், இன்றைக்கு நல்லமழை பொழிந்து கொண்டிருக்கின்றது. அவர் சொன்னதைப்போல குடிமராமத்து என்ற அற்புதமான திட்டம், விவசாயிகளுக்கு வரப்பிரசாதமான திட்டம். ஏரிகள், குளங்களில் இருக்கின்ற வண்டல் மண்ணை அங்கிருக்கின்ற விவசாயிகள்இலவசமாக எடுத்து அவர்களது நிலத்திற்கு இயற்கை உரமாக இன்றைக்கு வண்டல் மண் பயன்படுகிறது. அந்த நிலத்திற்கு இயற்கை உரமாக பயன்படுவது வண்டல்மண். இன்னொன்று, அந்த வண்டல மண்ணை அள்ளுகின்றபொழுது, ஏரி குளங்கள் ஆழப்படுகின்றது. ஆகவே, பருவமழை பெய்கின்றபொழுது, அந்த மழைநீர் முழுவதும் ஏரியிலே சேமிக்கப்படக்கூடிய சூழ்நிலை

இன்றைக்கு உருவாகியிருக்கிறது. அதனால் தான், நல்ல மழை பொழிந்து கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில் நாம் தூர்வாருவதால், ஆங்காங்கே ஏரிகளிலும், குளங்களிலும் நீர் நிரம்பியிருக்கின்ற காட்சியை தொலைக்காட்சியில் நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். ஒரு சொட்டு தண்ணீர் கூட வீணாகாமல் இருக்கவேண்டும் என்பதற்காக அம்மாவினுடைய அரசு 1000 கோடி தடுப்பணை கட்டுவதற்காக ஒதுக்கி இருக்கிறோம். எங்கெங்கெல்லாம் ஓடை இருக்கிறதோ, எங்கெங்கெல்லாம் ஆறுகள்இருக்கிறதோ, ஆற்று ஓரப்பகுதியிலே ஓடுகின்ற பகுதியில் தடுப்பணை கட்டப்பட்டு, நீர் சேமிக்கப்பட்டு, நிலத்தடி நீர் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சில ஓடைகள், சிறுசிறு நதிகள் அதன் குறுக்கே தடுப்பணை கட்டப்பட்டு, தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டு, நிலத்தடி நீர் உயர்ந்து, குடிப்பதற்கு தேவையான நீரை, விவசாயிகளுக்கு தேவையான நீரை அம்மாவினுடைய அரசு உருவாக்கித் தந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு மக்கள் என்ன எண்ணுகிறார்களோ, அதை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். இன்றைக்கு எல்லாம் வல்ல இறைவன் அருளால் மேட்டூர் 95 அடியை எட்டிவிட்டது. இன்றைக்கு 15000 கனஅடி தண்ணீர் வைத்திருக்கிறோம். இன்றைக்கு காலையில் 21000 கன அடி தண்ணீர் மேட்டூருக்கு வந்து கொண்டிருக்கின்றது. ஆகவே, இன்றைக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய ஆசியால், அருளால், இன்றைக்கு தமிழகம் செழிக்கும், வளம் பெறும். எத்தனை எதிர்க்கட்சிகள் கூக்குரல் இட்டாலும் அம்மாவினுடைய ஆட்சியை வீழ்த்தவோ, அசைக்கவோ முடியாது என்பதை திட்டவட்டமாக இந்த நிகழ்ச்சியின் வாயிலாக குறிப்பிட்டு உங்களுடைய மாவட்ட மாண்புமிகு அமைச்சர் திரு பி.தங்கமணி அவர்கள் இந்தப் பாலத்திற்கு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இந்த மண்ணிலே மறைந்தாலும், மக்கள் மனதில் தெய்வமாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற அந்த தெய்வத்தின் பெயரை சூட்ட வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். இந்த புதிதாக கட்டப்பட்ட உயர் மட்ட பாலத்திற்கு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா என்று பெயர் சூட்டப்படும் இந்தப் பாலத்திற்கு என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல புதிதாக துவங்கப்பட்ட கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா பெயரை சூட்டப்படும். மாண்புமிகு இதயதெய்வம்

புரட்சித்தலைவி அம்மா என்ற பெயர் கல்லூரிக்கு சூட்டப்படும் என்ற நற்செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு நல்ல மழை பெய்கிறது. எனவே, சீதோஷ்ண நிலை மாறுகின்றது. அப்படி மாறுகின்ற பொழுது காய்ச்சல் ஏறபடுகின்றது. இது வாடிக்கையாக வருவது. பல ஆண்டுகாலமாக இந்த காய்ச்சல் வருவது, அதற்கு அரசு தகுந்த நடவடிக்கை எடுத்து அதை குணப்படுகின்றது. ஆனால், இப்பொழுது புதிதாக டெங்கு காய்ச்சல் வந்திருக்கின்றது. இது நம் மாநிலத்திலிருந்து வரவில்லை, பக்கத்து மாநிலத்திலிருந்து நம் மாநிலத்திற்கு பரவியிருக்கிறது. இந்த டெங்கு காய்ச்சல் என்பது டெங்கு கொசு மூலமாக ஏற்படுகிறது. நல்ல தண்ணீரிலிருந்து தான் இந்த கொசு உற்பத்தியாகிறது. இது கழிவு நீரிலிருந்து வருவதில்லை. வீட்டில் குடிதண்ணீருக்காக இருக்கிற தொட்டியில் நீரை சேமித்து வைப்போம். சில நேரங்களில் அதை மூடியிருக்க மாட்டோம், 10, 15 நாட்களுக்கு தண்ணீரை மூடிவைக்காமல் வெளியூர்சென்றுவிடுவோம். அந்த நீரில் இந்த டெங்கு கொசு உற்பத்தியாகிறது. இது மக்களுக்கு தெரிவதில்லை. ஆகவே, தண்ணீரை மூடிவைக்கவேண்டும், வெளியூர் செல்லும்பொழுது குளியல் அறையில் நீங்கள் தண்ணீரை திறந்து வைத்துவிட்டுப் போகக்கூடாது, மூடிவைக்க வேண்டும் அல்லது அந்தத் தண்ணீரை அகற்றிவிட்டுப் போகவேண்டும். அதுபோல குளியல் அறையைச் சுற்றி தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும். ஏனென்றால் அதில் டெங்கு கொசு உற்பத்தியாகி, டெங்கு காய்ச்சல் வர வாய்ப்புள்ளது. இதை பொதுமக்கள் விழிப்போடு இருந்து, இதை தடுப்பதற்கு பொதுமக்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும். அதுமட்டுமல்ல, இந்த காய்ச்சல் வந்தவுடனே நீங்கள் கடையில் சென்று மாத்திரை ஏதும் உட்கொள்ளாமல், உடனடியாக அரசு மருத்துவமனைக்கோ, தனியாா மருத்துவனைக்கோ சென்று, மருததுவரை அணுகி, ரத்த பரிசோதனை செய்து, என்ன காய்ச்சல் என்பதைக் கண்டறிந்து அதற்குத் தகுந்தவாறு சிகிச்சை பெற்றுக்கொண்டால் இந்த டெங்கு காய்ச்சலை குணப்படுத்தி விடலாம். அதை விட்டுவிட்டு நான்கைந்து நாட்கள் நீங்களே மாத்திரை சாப்பிட்டு விட்டு, பின்னர் மருத்துவரை அணுகினால், இந்தக் காய்ச்சல் முற்றிவிடும். அப்பொழுது எவ்வளவுதான் வைத்தியம் செய்தாலும், இந்த

காய்ச்சலை குணப்படுத்த முடியாது. ஆகவே, வருகை தந்திருக்கின்ற அத்தனை பொதுமக்களும், கழக நிர்வாகிகளும் மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள், எந்தக் காய்ச்சல் வந்தாலும் உடனடியாக மருத்துவரை அணுகுங்கள், அதற்குத் தேவையான சிகிச்சையைப் பெற்று குணமடைவதற்கு வழிவகைகளை செய்யுங்கள் என்று இங்கே வந்திருக்கின்ற பத்திரிகையாளர்களும், ஊடக நண்பர்களும் இதற்கு உதவி செய்ய வேண்டும். தொலைக்காட்சியில் பார்க்கின்ற பொழுது, இந்த டெங்கு காய்ச்சல் எப்படி உற்பத்தியாகிறது, எங்கு உற்பத்தியாகி, இது கடித்த பிறகு நோய் உண்டாகிறது, காய்ச்சல் வருகிறது. இதற்கான அறிகுறி இவையெல்லாம் குறும்படங்கள் மூலமாக, ஊடகத்தின் வாயிலாக காண்பித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொழுது, அவர்கள் மருத்துவரை அணுகி சிகிச்சை பெற்றுக் கொள்வார்கள். ஆகவே, இதுபோன்ற விழிப்புணர்வு அளிக்கும் நிகழ்ச்சியை ஒளிபரப்ப வேண்டும் என்று ஊடக நண்பர்களை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். பத்திரிகை வாயிலாகவும் இதை செய்தியாக வெளியிடுங்கள் என்று இந்த தருணத்தில் கேட்டுக் கொண்டு, மாண்புமிகு அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரைக்கும், இந்த டெங்கு காய்ச்சலை அனைத்து நடவடிக்கைகளும் எடுத்துள்ளது. இதற்காக 23.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆங்காங்கே ரத்தப்பரிசோதனை செய்வதற்காக, 834 கருவிகள் வாங்கி கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கருவியின் மூலமாக ரத்தப்பரிசோதனை செய்தால், அரை நிமிடத்தில் result கொடுத்து விடுவார்கள். அதற்கேற்றவாறு சிகிச்சை அளிக்கும்பொழுது, அந்த டெங்கு காய்ச்சலை குணப்படுத்த முடியும். ஆகவே, அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரைக்கும் தேவையான மருத்துவர்களும், செவிலியர்களும் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். அதுமட்டுமல்ல, டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்துவதற்காக, இன்றைக்கு மருத்துவமனை, பள்ளிகள், பேருந்து நிலையம், ரயில் நிலையம் போன்ற மக்கள் அதிகமாக கூடுகின்ற பகுதியில் நிலவேம்பு சாறு கொடுக்கப்பட்டு, இந்த டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்துவதற்கு அம்மாவினுடைய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது என்பதை சுட்டிக்காட்டி, நீங்கள் அத்தனை பேரும் அரசுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று சொல்லி, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, உங்களுடைய அரசு, ஏழை,

எளியவர்களுடைய அரசு, மக்கள் என்ன எண்ணுகிறார்களோ,அதை நிறைவேற்றுகின்ற அரசு , அம்மாவினுடைய அரசு என்பதை தெரிவித்து, மிக சிறப்பாக, ஒரு மாநாடு போல் இந்த நிகழ்ச்சியை ஏற்படுத்திய மாண்புமிகு அமைச்சர் திரு தங்கமணி அவர்களுக்கு நன்றி தெரிவித்து மற்றும் அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்,

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**